




நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 117 | 22.10.2025 | WEDNESDAY | IPPASI : 5 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 117 | 22.10.2025 | புதன்கிழமை | ஐப்பசி : 5 | விலை : ரூ.5/– |



3 விருதுநகரில் மழையால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணம்: அமைச்சர் தங்கம் தென்னரசு

4 கேதார கௌரி விரதம்: ஐப்பசி அமாவாசையை முன்னிட்டு வீடு, கோயில்களில் மக்கள் வழிபாடு

2 தமிழகத்தில் பட்டாசு வெடிவிபத்தில் 89 பேருக்கு காயம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்


# 'ஐஎன்எஸ் விக்ராந்த் பாகிஸ்தானுக்கு தூக்கமில்லா இரவுகளை கொடுத்தது' பிரதமர் மோடி நெகிழ்ச்சி

புதுடெல்லி: அக்.22-

இந்திய கடற்படை வீரர்களுடன் தீபாவளி கொண்டாடிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த், பாகிஸ்தானுக்கு தூக்கமில்லா இரவுகளை கொடுத்தது என நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

பிரதமர் நரேந்திர மோடி ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையை இந்திய ராணுவ வீரர்களுடன் கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அந்த வகையில், இந்த ஆண்டு கோவா மற்றும் கர்நாடகாவின் கார்வார் கடற்கரையில் ஐஎன்எஸ் விக்ராந்த்தில் கடற்படை வீரர்களுடன் தீபாவளி திருநாளைக் கொண்டாடினார்.

அப்போது கடற்படை வீரர்கள் மத்தியில் உரையாற்றிய நரேந்திர மோடி, "இன்று ஒரு அற்புதமான நாள். இந்த காட்சி மறக்க முடியாதது. இன்று, எனது ஒரு பக்கத்தில் கடல் உள்ளது. மறுபக்கத்தில், இந்திய தாயின் துணிச்சலான வீரர்களின் பலம் உள்ளது.

ஒரு பக்கம் எல்லையற்ற எல்லைகள் உள்ளன. மறுபக்கம், எல்லையற்ற சக்திகளை உள்ளடக்கிய இந்த மாபெரும் ஐஎன்எஸ் விக்ராந்த் உள்ளது. சூரிய கதிர்களால் கடல் நீரில் ஏற்படும் பிரகாசம், இன்று நமது துணிச்சலான வீரர்களால் ஏற்றி வைக்கப்படும் தீபாவளி விளக்குகளால் ஏற்பட்டுள்ளது. இந்த முறை, கடற்படையின் துணிச்சலான வீரர்களான உங்கள் அவைருக்கும் மத்தியில் இந்த புனித தீபாவளி பண்டிகையை நான் கொண்டாடுவதில் அதிர்ஷ்டசாலியாக உணர்கிறேன்.

ஐஎன்எஸ் விக்ராந்த்தில் நேற்று கழித்த இரவை வார்த்தைகளால் விவரிக்க கடினமாக உள்ளது. அபிரிமிதமான ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் நீங்கள் நிறைந்திருந்ததைக் கண்டேன். நீங்கள் தேசபக்திப் பாடல்களைப் பாடுவதையும், உங்கள் பாடல்களில் ஆபரேஷன் சிந்தூரை நீங்கள் விவரித்த விதத்தையும் பார்த்தபோது ஒரு போர்க்களத்தில் நிற்கும் ஒரு வீரர் உணரும் அனுவமாக இருந்தது. அதை வார்த்தைகளால் முழுமையாக வெளிப்படுத்த முடியாது.

நான் ராணுவ உபகரணங்களின் வலிமையைக் கவனித்துக் கொண்டிருந்தேன். இந்த பெரிய கப்பல்கள், காற்றைவிட வேகமாக சீறிப்பாயும் விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகியவை ஆச்சரியமாகத் தெரிகின்றன. ஆனால், அவற்றை உண்மையிலேயே வலிமையானதாக மாற்றுவது அவற்றை இயக்குபவர்களின் தைரியம்தான்.

இந்த கப்பல்கள் இரும்பினால் ஆனதாக இருக்கலாம். ஆனால், நீங்கள் அவற்றில் ஏறும்போது அவை ஆயுதப் படைகளின் உயிருள்ள சுவாசிக்கும் படைகளாக மாறுகின்றன. நேற்று முதல் நான் உங்களுடன் இருக்கிறேன். ஒவ்வொரு கணத்திலும் நான் ஒன்றைக் கற்றுக்கொண்டேன். நான் டெல்லியை விட்டு கிளம்பும்போது இந்த தருணத்தை நான் வாழ்வேன் என்று நினைத்தேன். ஆனால், உங்கள் கடின உழைப்பு,



தவம், அர்ப்பணிப்பு மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருப்பதால், அதை என்னால் உண்மையிலேயே வாழ முடியவில்லை. இருப்பினும், அதுபற்றிய புரிதலைப் பெற்றேன். இந்த வாழ்க்கையை வாழ்வது எவ்வளவு கடினம் என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது.

உங்கள் அருகில் இருந்து, உங்கள் மூச்சை உணர்ந்து, உங்கள் இதயத்துடிப்பை உணர்ந்து, உங்கள் கண்களில் மின்னுவதைப் பார்த்து நான் ஒரு ஆழமான விஷயத்தை உணர்ந்தேன். நேற்று நான் கொஞ்சம் சீக்கிரமாகத் தூங்கினேன். வழக்கமாக இவ்வளவு சீக்கிரம் நான் தூங்கச் செல்ல மாட்டேன். நான் சீக்கிரமாகத் தூங்கியதற்குக் காரணம், நாள் முழுவதும் உங்களை கவனித்த பிறகு எனக்குள் ஏற்பட்ட திருப்தி உணர்வுதான். அது மனநிறைவின் தூக்கம்.

ஐஎன்எஸ் விக்ராந்தில் இருந்தவாறு நாட்டு மக்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிக முக்கியமாக, உங்கள் குடும்பங்களுக்கும் எனது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துகள்.

எல்லோரும் தங்கள் குடும்பத்துடன் தீபாவளியைக் கொண்டாட விரும்புகிறார்கள். நானும் என் குடும்ப உறுப்பினர்களுடன் தீபாவளியைக் கொண்டாட பழகிவிட்டேன். அதனால்தான், நான் என் குடும்பமாகக் கருதும் உங்கள் அனைவருடனும் தீபாவளியைக் கொண்டாட வந்துள்ளேன். நான் இங்கே என் குடும்பத்தினருடன் தரமான நேரத்தைச் செலவிடுகிறேன். இந்த தீபாவளி எனக்கு உண்மையிலேயே சிறப்பானது.

சில மாதங்களுக்கு முன்பு, விக்ராந்த் என்ற பெயரே பாகிஸ்தான் முழுவதும் அச்ச அலைகளை அனுப்பியதை நாம் கண்டோம். ஐஎன்எஸ் விக்ராந்த் பாகிஸ்தானுக்கு தூக்கமில்லா இரவுகளைக் கொடுத்தது. அதன் வலிமை அப்படிப்பட்டது. போர் தொடங்குவதற்கு முன்பே எதிரியின் தைரியத்தை உடைக்கும் பெயர். இது ஐஎன்எஸ் விக்ராந்த்தின் சக்தி. இந்த சந்தர்ப்பத்தில் நான் நமது ஆயுதப் படைகளுக்கு வணக்கம் செலுத்த விரும்புகிறேன்.

இந்திய கடற்படையால் உருவாக்கப்பட்ட பயம், இந்திய விமானப்படையால் வெளிப்படுத்தப்பட்ட அசாதாரண திறமை, இந்திய ராணுவத்தின் துணிச்சல் மற்றும் மூன்று படைகளுக்கு இடையிலான மகத்தான ஒருங்கிணைப்பு ஆகியவை பாகிஸ்தானை ஆபரேஷன் சிந்தூரின்போது மிக விரைவாக சரணடைய கட்டாயப்படுத்தின.

கடந்த 10 ஆண்டுகளில் நமது ஆயுதப் படைகள் சுயசார்பு பாரதத்தை நோக்கி விரைவாக நடவடிக்கைகளை எடுத்து வருவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். கடந்த 10 ஆண்டுகளில் நமது பாதுகாப்பு உற்பத்தி மூன்று மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு மட்டும் இது சுமார் ரூ. 1.5 லட்சம் கோடியை எட்டியது. 2014 முதல் இந்தியா 40க்கும் மேற்பட்ட உள்நாட்டு போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களை கடற்படைக்கு வழங்கியுள்ளது. இப்போது சராசரியாக, ஒவ்வொரு 40 நாட்களுக்கும் ஒரு புதிய உள்நாட்டு போர்க்கப்பல் அல்லது நீர்மூழ்கிக் கப்பல் கடற்படையில் சேர்க்கப்படுகிறது.

பிம்மோஸ் மேற்றும் ஆகாஷ் போன்ற நமது ஏவுகணைகளும் ஆபரேஷன் சிந்தூரில் தங்கள் திறனை நிரூபித்துள்ளன. பிம்மோஸ் என்ற பெயர் மிகவும் பிரபலமானது. அதைக் கேட்டாலே பலர் பதட்டமடைகிறார்கள், ஆச்சரியப்படுகிறார்கள். உலகின் பல நாடுகள் இந்த ஏவுகணைகளை வாங்க விரும்புகிறார்கள்.

உலகின் முன்னணி பாதுகாப்பு ஏற்றுமதியாளர்களில் இந்தியாவும் இடம்பெற வேண்டும் என்பதே எங்களின் குறிக்கோள். கடந்த 10 ஆண்டுகளில் நமது பாதுகாப்பு ஏற்றுமதிகள் 30 மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளன.

நமது அறிவியல் மற்றும் நமது வலிமை மனித குலத்துக்கு சேவை செய்வதையும் அதைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இன்று உலகின் எண்ணெய் விநியோகத்தில் 66% இந்தியப் பெருங்கடல் வழியாகச் செல்கின்றன. இந்த பாதைகளைப் பாதுகாப்பதில் இந்தியக் கடற்படை இந்தியக் கடல்களின் பாதுகாவலராகத் திகழ்கிறது" என தெரிவித்தார்.





## வாடிப்பட்டி அருகே பாண்டியராஜபுரத்தில் அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு உரம் தயாரிக்கும் பயிற்சி

வாடிப்பட்டி, அக்.22.

மதுரை மாவட்டம் பாலமேடு அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி மற்றும் அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வேளாண்மை பிரிவு மாணவ

மாணவிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பு பற்றிய உள்ளுறை அகப் பயிற்சி முகாம் வாடிப்பட்டி அருகே பாண்டியராஜபுரம் ராசி மற்றும் எஸ்.எஸ். மண்புழு உரப் பண்ணை களில் 10 நாட்கள் நடந்தது.

முகாமை பாலமேடு பள்ளியின் தலைமை ஆசிரியர் திருநாவுக்கரசு, தலைமை தாங்கி தொடக்கி வைத்தார். வேளாண்மை ஆசிரியர் முருகேஸ்வரி, முன்னிலை வகித்தார். தமிழ் ஆசிரியர் ஜெய்கணேஷ், வரவேற்றார். இந்த முகாமில் மண்புழு உர தொழிற்சாலை உரிமையாளர்கள் சரவணன், சுரேஷ், வேளாண்மை ஆசிரியர் நந்தினி, ஆகியோர் பயிற்சியளித்தனர். இதில் உரப் படுக்கை தயாரித்தல், செரிவூட்டப்பட்ட மண் கலவை தயாரித்தல், உரம் + சேகரித்தல், ஆட்டு உரம் தயாரித்தல், உரங்கள் சலித்தல், பிரித்தெடுத்தல், எடை போடுதல், சிப்ப மிடுதல், பஞ்சகாவியம் தயாரித்தல், ஹியூமிக் அமிலம் தயாரித்தல் உள்ளிட்டவை பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது.

## திருப்பூர் மடத்துக்குளம் போடிபட்டி கிளைக் கழகம் சார்பாக அஇஅதிமுக 54 வது ஆண்டு விழா

திருப்பூர், அக்.22-

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட போடி பட்டி கிளைக் கழகம் சார்பாக திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினருமான சி மகேந்திரன் அவர்கள் வழிகாட்டின்படி உடுமலை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் போக நாதன்

வழிகாட்டுதல் படி காமராஜர் நகர் கிளை கழக செயலாளர் டி. நாகமுத்து அவர்கள் தலைமையில் காமராஜர் நகர் பகுதியில் உள்ள



கிளைக் கழக அஇஅதிமுக மகளிர் அணி நிர்வாகிகள் புத்தாடை மற்றும் இனிப்பு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ரமேஷ் என்ற ராமசாமி கிளை கழக செயலாளர், மல்லிகா சாமிநாதன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், விஜய் குமார், குட்டி என்ற ரங்கநாதன்,அண்ணா தொழில் சங்க நிர்வாகி சேதுராமன், கனகராஜ், ராஜேந்திரன், மயில்சாமி, பூபதி, பழனிச்சாமி,கந்தசாமி மற்றும் அ.இ. அ.தி.மு.க காமராஜர் நகர் பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்

## திசையன்விளையில் தமிழினி திரைப்பட குழுவினர் பாட்டிகளுடன் தீபாவளி கொண்டாட்டம்

திசையன்விளை. அக்.22

டிசம்பர் மாதம் வெளிவர இருக்கும் தமிழினி படக் குழு சார்பாக திருநெல்வேலி திசையன்விளையில் வைத்து தீபாவளி விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவானது பாட்டிகளுடன் தீபாவளி என கோலாகலமாக கொண்டாடப்பட்டது. படக்குழு சார்பாக வயது முதிர்ந்த பெண்மணிகளுக்கு நலத்திட்ட உதவிகளாக சேலை ,இனிப்பு மற்றும் பண உதவி செய்யப்பட்டது. திரைப்பட தயாரிப்பாளர் டிபி.சரவணன் விழாவிற்கு தலைமையேற்று அனைவருக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் தமிழினி பட இயக்குனர் கணேஷ்




மூர்த்தி ,இணை இயக்குனர் முத்து, மேனேஜர் பிரகாஷ், ஒளிப்பதிவாளர் பாலகுமரன் மற்றும் ராஜ்குமார், கிளாட்வின், கிருத்திஷ் ,விஜய ராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர் .இதற்கான ஏற்பாடுகளை தமிழினி திரைப்படக் குழுவினர் செய்திருந்தனர்.

# தமிழகத்தில் பட்டாசு வெடிவிபத்தில் 89 பேருக்கு காயம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, அக்.22-

தீபாவளி பண்டிகைக்காக பட்டாசு வெடித்ததில் 89 பேர் காயமடைந்ததாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று (அக்.20ம் தேதி) சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தீபாவளி பண்டிகை பட்டாசு விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மருத்துவ பயனாளிகளை நேரில் சந்தித்து நலம் விசாரித்து, தீ விபத்து சிகிச்சை வார்டுகளில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப் பணியாளர்களுடன் தேநீர் அருந்தி, இனிப்புகள் வழங்கி கலந்துரையாடினார்.

பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், "தீ விபத்து சிகிச்சை வார்டு ஆய்வு திமுக அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு தமிழக முதல்வரின் வழிகாட்டுதலோடு, ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி அன்று கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வருகை புரிந்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப் பணியாளர்களுடன் கலந்துரையாடி, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் சொல்லி, அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்து செல்வது என்பது தொடர் வாடிக்கையாக இருந்து வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வருகை புரிந்து இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்து இருக்கிறோம். தமிழக முதல்வர் ஒவ்வொரு தீபாவளி முன்பாகவும் பாதுகாப்பற்ற முறைகளில் பட்டாசு வெடிப்பதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வும், எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் அரசின் பல்வேறு துறைகளின் எடுத்துரைக்க வேண்டும் என்றும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

அந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் காவல்துறை, தீயணைப்புத் துறை, மாசுக்கட்டுப் பாட்டு வாரியம் போன்ற பல்வேறு துறைகள் இதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றன. மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரை முதல்வரின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், வட்டார அரசு மருத்துவமனைகளிலும் தீபாவளி அன்று சிறப்பு சிகிச்சை வார்டுகள் அனைத்து மருத்துவமனைகளிலும் தொடங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் 36ல் தலா 20 படுக்கைகள் வீதம் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கான தீக்காய பிரிவு வார்டுகள் தொடங்கப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் கடந்த வாரம் இம்மருத்துவமனையில் 20 படுக்கை வசதிகளுடன் கூடிய வெண்டிலேட்டர் கருவியுடன் கூடிய வார்டுகள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று தனித்தனி வார்டுகள்



தொடங்கப்பட்டது. நேற்று முதல் தீபாவளி பண்டிகை கொண்டாட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் தொடங்கி பட்டாசு வெடித்ததினால் தமிழ்நாடு முழுவதும் சிகிச்சைக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 89 பேர், இதில் 41 பேர் சிகிச்சை பெற்று நலமுடன் இல்லம் திரும்பி இருக்கிறார்கள். 48 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த 48 பேரில் சிறிய அளவிலான அறுவை சிகிச்சை என்கின்ற வகையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் 8 பேர், மிகச் சிறிய அளவில் அறுவை சிகிச்சை என்கின்ற வகையில் 32 பேர், அந்த வகையில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் 6 குழந்தைகள் பாதிக்கப்பட்டு ஒரு மகளிர் சகோதரி ஒருவர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த 7 பேரில் ஒரு குழந்தைக்கு மட்டும் 7% அளவிற்கு தீக்காய பாதிப்பும், ஒரு குழந்தைக்கு 15% தீக்காய பாதிப்பும் ஏற்பட்டிருக்கிறது. யாருக்கும் உயிர் பாதிப்பு என்கின்ற அளவில் பிரச்சினை இல்லை. மிகப் பெரிய அளவில் காயங்கள் இல்லாமல் தீபாவளி கடந்துக் கொண்டிருக்கிறது. இன்னமும் மீதமுள்ள நேரம் கடந்துக் கொண்டிருக்கிறது.

இன்னமும் பாதுகாப்பான தீபாவளி மக்கள் கொண்டாட வேண்டும் என்கின்ற வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற வகையிலும், தீபாவளி நாளில் தங்களுடைய குடும்பத்தை விட்டு, அரசு மருத்துவமனைகளில் குறிப்பாக தீக்காய சிகிச்சை வார்டுகளில் பணியாற்றுகின்ற மகத்தான மருத்துவச் சேவை ஆற்றுகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களை பாராட்டுகின்ற வகையில் ஒவ்வொரு ஆண்டும் நான் நேரில் சென்று அவர்களுடன் தேநீர் அருந்தி அவர்களுக்கு இனிப்புகளை வழங்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகிறோம். அந்த வகையில் இந்த நிகழ்ச்சி இன்றைக்கு நடைபெற்று வருகிறது.

மருத்துவர்களும் தீக்காய சிகிச்சை களுக்காக வரும் பொதுமக்களுக்கு சிகிச்சைகள் நல்ல முறையில் வழங்கி வருகிறார்கள். மேலும் குழந்தைகள் பட்டாசு வெடிக்கும் போது பெரியவர்களுடன் இருந்து வெடிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறோம். பருத்தி ஆடைகளை அணிந்து பட்டாசு வெடிப்பதுதான் பாதுகாப்பானது, நைலன் போன்ற ஆடைகளை அணிந்து பட்டாசு வெடித்தால் தீப்பட்டவுடன் விரைந்து ஆடைகள் பற்றிக் கொள்ளும் என்பதால் அந்த ஆடைகளை தவிர்க்க வேண்டும், பட்டாசு வெடிக்கும்போது செருப்புகள் அணிய வேண்டும், பட்டாசு வெடிக்கும் போது அருகில் ஒரு வாளியில் தண்ணீர் வைத்திருக்க வேண்டும்,

காற்றோட்டமான பகுதிகளில் பட்டாசு வெடிப்பது நல்லது, இடை வெளி விட்டு பட்டாசு வெடிக்க வேண்டும், ராக்கெட் போன்ற பட்டாசுகளை வெடிக்கும்போது சாய்வு நிலையில் வெடிக்க கூடாது, நேர்நிலைகளில் வைத்து தான் வெடிக்க வேண்டும் என்று இப்படி ஒவ்வொரு தீபாவளி நாளிலும் பட்டாசு வெடிப்பதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றும் மிகப் பெரிய அளவில் பாதிப்புகள் இல்லாத வகையில் தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட வேண்டும் என்கின்ற வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது" என தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த மா.சுப்பிரமணியன், "ஏற்கெனவே கடந்த வாரம் தமிழக முதல்வரின் வழிகாட்டுதலோடு, மக்கள் நல்வாழ்வுத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை போன்ற சேவை துறைகளுடன் மாநில, மாவட்ட அளவிலான அலுவலர்கள், 10க்கும் மேற்பட்ட துறை செயலாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து விளக்கங்கள் எடுத்து கூறி ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்தான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த சேவைத் துறை அலுவலர்கள் கூட்டங்கள் நடத்தி பாதுகாப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் கடந்த காலங்களில் எங்கெயெல்லாம் மழை பாதிப்புகள் உள்ளாக்கியதோ அந்த பகுதிகளில் தற்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் கடந்த 3 ஆண்டுகளாக மழைநீர் தேங்குவது என்பது இருந்தது. அதற்கு காரணம் அப்பகுதியில் மெட்ரோ பணிகள் நடைபெறுவதால் அங்கு ஏற்கெனவே இருந்த மழைநீர் வடிகால் வாரிய பணிகள் துண்டிக்கப்பட்ட நிலையில் அப்பகுதியில் மழைநீர் புகுவது என்பது இருந்தது, தற்போது அப்பணிகள் சரி செய்யப்பட்டு விட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பெய்த கனமழை காரணமாக தூத்துக்குடி அரசு மருத்துவமனை, ஏரல் போன்ற அரசு மருத்துவமனைகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளானது. அந்த வகையில் இந்த ஆண்டும் தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழை பெய்து வருகிறது. இதனால் ஏற்பட்டுள்ள சிறிய பாதிப்பும் போக்கப்பட்டிருக்கிறது. தற்போது மருத்துவமனைகளில் எங்கேயெல்லாம் மழைநீர் தேங்கியதோ அங்கேயெல்லாம் மாவட்ட ஆட்சி நிர்வாகமும், பொதுப்பணித் துறை நிர்வாகமும் அந்த பாதிப்புகளை சரி செய்து வருகிறது" என்று கூறினார்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் சுகந்தி ராஜகுமாரி, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் கவிதா, மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்" என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் 60 மெட்ரிக் டன் பட்டாசு கழிவுகள் அகற்றம்: சென்னை மாநகராட்சி அறிவிப்பு

சென்னை, அக்.22-

தமிழ்நாடு முழுவதும் 108 ஆம்புலன்ஸ்களுக்கு வழக்கத்தை விட கூடுதலாக அழைப்புகள் வந்ததாக ஆம்புலன்ஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் நேற்று முன்தினம் தீபாவளி பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அதுபோல் தமிழ்நாட்டிலும் அனைத்து மாவட்டங்களிலும் பொதுமக்கள் உற்சாகத்துடன் தீபாவளி பண்டிகையை கொண்டாடினர். புத்தாடை அணிந்து, பலகாரங்கள் செய்தும், பட்டாசு வெடித்தும் உற்சாகமாக கொண்டாடினர். தலைநகர் சென்னையிலும் நேற்று இரவு இடைவிடாது பட்டாசு சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. இந்த நிலையில், தீபாவளி பண்டிகையை தொடர்ந்து சென்னையில் நேற்று மாலை 6 மணி வரை 60 மெட்ரிக் டன் பட்டாசு கழிவுகள் அகற்றப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக ஆலந்தூர் மண்டலத்தில் 6.89 மெட்ரிக் டன், பெருங்குடி மண்டலத்தில் 6.03 மெட்ரிக் டன் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. பட்டாசு கழிவுகளை அகற்றும் பணியில் 6,000க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் ஈடுப ட்டுள்ளனர். பட்டாசு கழிவு கள் தரம்பிரிக்கப்பட்டு கும்மிடிபூண்டி, பெங்குடி, கொடுங்கயூர் கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் பட்டாசு கழிவுகளை தனியாக சேகரித்து தூய்மை பணியாளர்களிடம் ஒப்படைக்க சென்னை மாநகராட்சி அறிவுறுத்தி உள்ளது. இதைபோல தமிழ்நாடு முழுவதும் 108 ஆம்புலன்ஸ்களுக்கு வழக்கத்தை விட 61% அழைப்புகள் கூடுதலாக வந்ததாக 108 ஆம்புலன்ஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது. தீபாவளி தினமான நேற்று மாலை 6 மணி வரை மட்டும் 4,635 அழைப்புகள் வந்ததாகவும், அதில் தீக்காயங்களுக்காக 135 அழைப்புகள் வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விஐபி தரிசனங்களை அனுமதிப்பதால் திருச்செந்தூரில் பக்தர்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டுமா? : ஐகோர்ட் கேள்வி


திருச்செந்தூர், அக்.22-

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருக்காமல் தரிசனம் செய்ய என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என கோயில் நிர்வாகத்திற்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை கேள்வி எழுப்பியுள்ளது. திருச்செந்தூர் கோயிலுக்கு வரும் மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கும் நிலையில் விஜபி பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதனால் விஜபி பக்தர்கள் செல்லும் போது சாதாரண பக்தர்கள் மேலும் மணிக்கணக்கில் காத்திருக்கும் நிலை ஏற்படுகிறது. இதன் எதிரொலியாக விஜபி தரிசனம் குறித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்த போது, "திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருக்காமல் தரிசனம் செய்ய என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விஜபி/விவிஜபி தரிசனங்களை அனுமதிப்பதால் பொது பக்தர்கள் வரிசையில் காத்திருக்க வேண்டுமா?. விஜபி/விவிஜபி தரிசனத்துக்கு தனி நேரம் ஒதுக்க கோயில் நிர்வாகம் விரும்புகிறதா?.விஜபி தரிசனத்தின்போது, பக்தர்களை காத்திருக்க வைக்காமல் இருக்க மாற்று ஏற்பாடு செய்ய முடியுமா? என கேள்வி எழுப்பிய நீதிபதி, கோயில் இணை ஆணையர் பதில் மனுதாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளார்.

# அறுந்து கிடக்கும் மின்கம்பிகள் குறித்து பொதுமக்களுக்கு மின்வாரியம் எச்சரிக்கை

சென்னை, அக்.22-

அறுந்து கிடக்கும் மின் கம்பிகள் அருகில் செல்ல வேண்டாம் என மக்களை மின்வாரியம் அறிவுறுத்தியுள்ளது. மழைக் காலங்களில் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து மின்வாரியம் வெளியிட்ட அறிக்கை: ஈரமான கைகளால் மின் சுவிட்சுகள், மின்சாதனங்களை இயக்க முயற்சிக்க வேண்டாம், வீட்டின் உள் புறசுவர் ஈரமாக இருந்தால் சுவிட்சுகள் எதையும் இயக்கக் கூடாது, ஈரப்பதமான சுவர்களில் கை வைக்க கூடாது.




மேலும் நீரில் நனைந்த அல்லது ஈரப்பதமான மின் விசிறி, லைட் உட்பட எதையும் மின்சாரம் வந்தவுடன் இயக்க வேண்டாம், மின் கம்பிகள் அறுந்து கிடக்கும் பகுதிகள், மின்சார கேபிள்கள், மின்சார கம்பங்கள், பில்லர் பாக்ஸ் மற்றும் டிரான்ஸ்பார்மர்கள் இருக்கும் பகுதிகளுக்கு அருகில் செல்வது தவிர்க்க வேண்டும்.

சாலைகளிலும், தெருக்களிலும் மின்கம்பங்கள் மற்றும் மின்சாதனங்களுக்கருகே தேங்கிக்கிடக்கும் தண்ணீரில் நடப்பேதா, ஓடுவேதா, விளையாடுவதோ மற்றும் வாகனத்தில் செல்வேதா தவிர்க்கப்பட வேண்டும். மின்சேவை, மின்கம்பி அறுந்துவிழுதல், மின்தடை குறித்த புகார்களுக்கு உடனடியாக மின்னகத்தை "94987 94987" தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# பட்டாசு புகை - WHO நிர்ணயித்ததைவிட டெல்லியில் காற்று மாசு 15 மடங்கு அதிகம்

புதுடெல்லி, அக்.22-

டெல்லியில் இந்த ஆண்டு பட்டாசு வெடிக்க உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்ததை அடுத்து மக்கள் 'பட்டாசு தீபாவளி'யை கொண்டாடியதன் எதிரொலியாக, உலக சுகாதார நிறுவனம் (WHO) நிர்ணயித்ததைவிட 15 மடங்கு காற்று மாசு அதிகரித்துள்ளதாக அதிகாரப்பூர்வ தரவு தெரிவிக்கிறது. டெல்லியில் காற்று மாசு ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் தீபாவளிக்கு பட்டாசு வெடிக்க உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே தடை விதித்திருந்தது. அதை எதிர்த்து பட்டாசு உற்பத்தியாளர்கள் உள்ளிட்டோர் தொடர்ந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வு, தீபாவளி அன்று இரவு 8 மணி முதல் 10 மணி வரை பசுமை பட்டாசுகளை மட்டும் வெடிக்க அனுமதி அளித்து உத்தரவிட்டது.

நேற்றைய தீபாவளி கொண்டாட்டத்தின்போது நேரக் கட்டுப்பாடு மீறப்பட் டதாகவும், மேலும் பசுமை பட்டாசுகளைத் தாண்டி தடை விதிக்கப்பட்ட பட்டாசுகளும் வெடிக்கப்பட்டதாகவும் இவற்றின்மூலம் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு வெளிப்படையாக மீறப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில், இன்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில், டெல்லியில் ஒரு கன மீட்டருக்கு 228 மைக்ரோ கிராம் அளவில் மாசு பதிவாகி உள்ளதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. உலக சுகாதார நிறுவனம் அனுமதித்துள்ள ஒரு கன அடிக்கு 15 மைக்ரோ கிராம் என்ற அளவுடன் ஒப்பிடும்போது இது 15.1 மடங்கு அதிகம். IQAir என்ற சுவிட்சர்லாந்து காற்றுத் தர தொழில்நுட்ப நிறுவனம் உலகின் மிக முக்கிய 120 மாநகரங்களின் காற்ற மாசு குறித்த தரவுகளை வெளியிட்டுள்ளது. அதில் இன்று காலை நிலவரம் பதிவாகி உள்ளது. அதன்படி, டெல்லியின் காற்றுத் தரக்குறியீடு 429 ஆக இருந்ததாகவும், இதன் மூலம் உலகில் மிகவும் மாசுபட்ட மாநகராக டெல்லி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2ம் இடத்தில் உள்ள லாகூரில் காற்றின் தரக்குறியீடு 260 ஆகவும், 3ம் இடத்தில் உள்ள கராச்சியில் தரக்குறியீடு 182 ஆகவும் பதிவாகி உள்ளது. கடுமையான காற்று மாசு ஆரோக்கியமாக உள்ள மக்களிடம் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், ஏற்கனவே நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை மேலும் கடுமையாக பாதிப்படைச் செய்வதாகவும் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. வாரியத்தின் தரவுகளின்படி, 51 முதல் 100 வரையிலான காற்றின் தரக் குறியீடு திருப்திகரமானது, 101200 மிதமானது, 201300 மோசம், 301400 மிகவும் மோசம், 401500 கடும் மோசம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வைகை அணையில் உபரி நீர் வெளியேற்றம்: 5 மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

ஆண்டிபட்டி, அக்.22-

வைகை அணையின் நீர்மட்டம் 69 அடியாக உயர்ந்ததால் 5 மாவட்ட கரையோர மக்களுக்கு மூன்றாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது. உபரி நீர் பெரிய, சிறிய மதகுகள் வழியே வெளியேற்றப் பட்டு வருவதால் யாரும் ஆற்றுக்குள் இறங்கவோ, வீடியோ எடுக்கவோ கூடாது என்று நீர்வளத் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் மூல வைகை, முல்லை பெரியாறு மற்றும் வைகையின் துணை ஆறுகளான கொட்டக்குடி, வராக நதி, சுருளி ஆறு உள்ளிட்ட பல ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் வைகை அணைக்கான நீர்வரத்து விநாடிக்கு 25 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. ஆகவே கடந்த 18ம் தேதி ஒரே



நாளில் நீர்மட்டம் 4 அடி உயர்ந்து 66 அடியை எட்டியது. இதனைத் தொடர்ந்து முதல் வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்த நிலையில் நீர்மட்டம் நேற்று (அக்.20) 69 அடியாக உயர்ந்தது. 71 அடி வரை நீர் தேக்கலாம் என்றாலும், அதிகப் படியான நீர் வந்து கொண்டிருந்ததால் உபரி நீரை அப்படியே வெளியேற்ற நீர்வளத் துறையினர் முடிவு செய்தனர். இதற்காக மூன்றாவது வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அணையில் உள்ள அபாய சங்கு மூன்று முறை பலமாக ஒலிக்கப்பட்டது. பின்பு பெரிய, சிறிய மதகுகளின் வழியே 5 ஆயிரத்து 635 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. இதனால் பூங்காவில் உள்ள தரைப்பாலம் மூழ்கியது. இப்பகுதியை கடக்க தடை விதிக்கப்பட்டது.

அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையினால் நீர்வரத்து இன்று காலை 6.30 மணிக்கு 4 ஆயிரத்து 875 கனஅடியாக இருந்தது. மழை நேரம் என்பதால் அலுவலர்கள் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஒரு முறை நீரை அளவீடு செய்து வருகின்றனர். இதன்படி இன்று காலை 10 மணிக்கு நீர்வரத்து 3 ஆயிரத்து 630 கனஅடியாக இருந்தது.

நீர்வரத்துக்கு ஏற்ப வெளியேற்றப்படும் நீரின் அளவும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆகவே தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கரையோர மக்கள் கவனமுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பொதுமக்கள் யாரும் ஆற்றுக்குள் இறங்கவோ, குளிக்கவோ கூடாது. செல்ஃபி, புகைப்படம், வீடியோ எடுக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நீர்மட்டம் 69.15 அடியாகவும் (மொத்த அளவு 71). விநாடிக்கு 3 ஆயிரத்து 630 கனஅடி நீர்வரத்து உள்ளது. இந்த நீர் அப்படியே உபரியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. கால்வாய் வழியே ஆயிரத்து 280 கனஅடி நீரும், ஆற்றில் 2 ஆயிரத்து 281 கனஅடியும், குடிநீர் திட்டங்களுக்காக 69 கனஅடி நீரும் சென்று கொண்டிருக்கின்றன.



# கூட்டுறவு துறை மூலம் விவசாயிகளுக்கு யூரியா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## த.மா.கா.விவசாய அணி கோரிக்கை மனு

திருச்சி, அக்.22-

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ஏராளமான விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு மனுக்களை வழங்கினர். அதேபோல் த.மா.கா விவசாய அணி மாவட்ட தலைவர் புங்கனூர் செல்வம் தலைமையில் கோரிக்கை மனு அளித்த மனுவில்கூறியிருப்பதாவது:

திருச்சி மாவட்டத்தில் 14 வட்டாரம் மற்றும் பேரூராட்சி, மாநகராட்சி உள்ளிட்ட பகுதிகளில் காவேரி 17 கிளை வாய்க்கால் மூலம் நெல் சாகுபடி 80,000 ஏக்கருக்கும் பரப்பளவில் விவசாயிகள் விவசாய பணிகள் செய்து வருகின்றனர். மேலும் மற்ற வாழை, கரும்பு, மலர் சாருபடி என 11/4, இலட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப் படுகிறது எனவே கடன் பெரும் விவசாயிகள் அன்றி அனைத்து விவசாயிகளும் தேவையான முழு அளவிலான கடன் வசதி, அரசு கூட்டுறவு துறை மூலம் வழங்க உரம் வழங்க உரிய நடவடிக்கை வேண்டும்.

திருச்சி மாவட்டத்தில் 25,000 டன் தேவை செய்வதால் பற்றாக்குறை மிக அதிக அளவில் உள்ளது. இதைப் பயன்படுத்தி தனியார் உள்ள நிலையில் கூட்டுறவுத் துறையானது குறைவாக கொள்முதல் செய்து வினியோகம் உரம் விற்பனை செய்யும் வியாபாரிகள் 4 மடங்கு விலை உயர்த்தி உள்ளன. எனவே கூட்டுறவுத்துறை மூலம் உறவு விற்பனை எடுக்க வேண்டும் .விவசாயிகளின் கால்நடைகளுக்கு கால்நடை துறை சார்பில் காப்பீட்டு பிரீமியர் தொகைசெலுத்தவில்லை. கால்நடைகளுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் பல கிராமங்களுக்கு கால்நடை மருத்துவர்கள் அழைத்தாலும் வருவதில்லை. மாட்டுத்தீவனம் பல இடங்களில் மானிய விலையில் கிடைக்கவில்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார். அப்போது வயலூர் ராஜேந்திரன் உடனிருந்தார்.



# திருச்சியில் குவிந்த 750 டன் குப்பைகளை மழைக்கான பிரத்தியேக ஆடை கூட இல்லாமல் கொட்டும் மழையில் நனைந்தவாறு குப்பைகளை மாநகராட்சி ஊழியர்கள் அள்ளினர்

திருச்சி, அக்.22-

தீபாவளியை முன்னிட்டு மலைக்கோட்டை பகுதிகளில் அதிகளவு வணிக நிறுவனங்களும், மாநகராட்சி அனுமதிபெற்று நூற்றுக்கணக்கான தற்காலிக தரைக்கடை வியாபாரிகளும் கடைகள் அமைத்து வியாபாரம் செய்தனர். இதனால் மலைக்கோட்டை, என்எஸ்பி ரோடு, சிங்காரத்தோப்பு, சூப்பர்பஜார், பெரிய கடைவீதி, சின்னகடைவீதி, காந்திமார்க்கெட் சாலை பகுதி என இப்பகுதியில் மட்டும் சுமார் 400 தூய்மை பணியாளர்கள் தற்போது தூய்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். திருச்சியில் நேற்று காலை முதல் தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில் சாலையில் வீசப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் துணிகுப்பைகள் மழைநீருடன் கலந்து ஆங்காங்கே துர்நாற்றம் வீசவதுடன் கூவம்போல காட்சியளிக்கிறது

திருச்சி மாநகராட்சியில் உள்ள 65 வார்டுகளில் பல்வேறு பகுதிகளிலும் பட்டாசு வெடித்து காணப்படும் குப்பை மற்றும் பல்வேறு பகுதிகளில் உள்ள சாலைகளில் தீபாவளி தினத்தன்று சேர்ந்த குப்பைகளை அகற்றும் பணியில் இன்று சுமார் 1700க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டனர்.

மழை பெய்தாலும் மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் மழையையும் பொருட்படுத்தாது எந்த ஒரு கையுறை மட்டும் உபகரணங்கள் இல்லாமல், மழைக்கான பிரத்தியேக ஆடை கூட இல்லாமல் மழையில் நனைந்தவாறு குப்பையிலே அள்ளினர்கள் . இது போன்ற காலங்களில் மாநகராட்சிநிர்வாகம் அவர்களுக்கானகையுறை மற்றும் ரெயின் கோட் போன்ற வற்றை வழங்கினால் அவர்களின் நலன் பாதுகாக்கப்படும்என்று சமூக ஆர்வலர்கள் கூறினர். திருச்சியில் 65வார்டுகளில்வழக்கமாக 350 டன் முதல் 400 டன் வரை குப்பைகள் தேங்கி கிடக்கும். ஆனால் தற்போது தீபாவளி பண்டிகை முன்னிட்டு 750 டன் குப்பைகள் சேர்ந்துள்ளது. அவற்றை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. அதேநேரம் மழையின் காரணமாக குப்பைகள் அள்ளும் பணி தாமதமாகி வருகின்றது.

இருந்தபோதிலும் குப்பைகளை நேற்று மதியம் முழுவதுமாக அகற்றும் பணி வேகமாக அகற்றப்பட்டுவிடும் என்று மாநகராட்சி அதிகாரிகள் கூறினர்.



■ தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும் திருச்சி தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழிகாட்டுதலின்படி மண்டல 3க்கு உட்பட்ட 42வது வார்டுக்கு உட்பட்ட ராஜ் நகரில் மழை நீர் புகுந்து தெருவுக்குள் வருவதை மண்டல குழுதலைவர்மு.மதிவாணன், மாமன்ற உறுப்பினர் நீலமேகம் மற்றும் மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

# விருதுநகரில் மழையால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணம்: அமைச்சர் தங்கம் தென்னரசு

விருதுநகர், அக்.22-

தொடர் மழையால் உயிரிழந்த 2 பேரின் குடும்பத்துக்கு ரூ.4 லட்சம் நிவாரணம் அரசு சார்பில் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

விருதுநகர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களுடன் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு இன்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அவர் அளித்த பேட்டியில், "வடகிழக்கு பருவமழையையொட்டி விருதுநகர் மாவட்டத்தில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மற்றும் பல்வேறு துறை அதிகாரி களுடன்




இதுவரை என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, அடுத்து மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விரிவான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

விருதுநகர் மாவட்டத்தில் எந்த சூழ்நிலையையும் சந்திக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் முழு அளவில் தயாராக உள்ளது. பல்வேறு துறைகளை சார்ந்தவர்களும் தங்கள் துறை சார்ந்த நடவடிக்கைகள் குறித்து விளக்கியுள்ளனர். கடந்த 2 நாள்கள் பெய்த தொடர் மழையால் மாவட்டத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர். 19 குடிசை வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இறப்பு ஏற்பட்ட குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேவேளையில் அவர்களுக்கு உரிய நிவாரணமாக ரூ.4 லட்சம் அரசு சார்பில் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ராஜபாளையம் பகுதியில் ஒரே இடத்தில் சுற்றுச்சுவர் விழுந்து 35 ஆடுகள் இறந்துள்ளன. அதற்கும் உரிய இழப்பீடு வழங்கப்படும். வீடுகள் பாதிக்கப்பட்டோருக்கு, குடிசை வீடுகளுக்கு ரூ.4 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பராமரிப்பைத் தாண்டி, சேதமடைந்த வீடுகளை சீரமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நிவாரணம் வழங்குவது ஒருபுறம் இருந்தாலும் எந்த வகையிலும், உயிர்ச் சேதம் ஏற்படக் கூடாது என்பது தான் முதல்வர் எங்களுக்கு வழங்கியுள்ள ஆணையும் அறிவுரையும் ஆகும். அதுதொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அணைகள் மிக வேகமாக நிரம்பி வருகின்றன. இதற்காக தேவையான நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்கும்.

நீர்வளத்துறை, வருவாய்த்துறை மூலம் மழைநீர் தேங்கும் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மழை நீர் தேங்கும் இடங்களாக 15 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அங்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அணைகள் திறக்கும் போது கீழ் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும். வருவாய்த்துறை இப்பணிகள் ஒருங்கிணைக்கும்." என்றார்.

# அரியலூர் ரெயில் நிலையத்தில் ரெயிலில் ஏற முயன்று தவறி விழுந்த பெண்ணை காப்பாற்றிய ரெயில்வே போலீசாருக்கு குவியும் பாராட்டு

அரியலூர், அக்.22-

ஓடும் ரயிலில் ஏற முயன்று தவறி கீழே விழுந்த பெண் பயணியை ரயில்வே பாதுகாப்பு படை காவலர் பத்திரமாக மீட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்த சிசிடிவி காட்சியும் வெளியாகி உள்ளது. அரியலூர் ரெயில் நிலையத்தில் ரெயில்வே போலீசார் செந்தில் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது விழுப்புரம் திருச்சி பயணிகள் ரெயில் திருச்சி நோக்கி புறப்பட்டது. அப்போது பெண் பயணி ஒருவர் ஓடும் ரெயிலில் அவசரம் அவசரமாக ஏற முயன்றதை கவனித்தார். போது அந்தப் பெண் பயணியின் பிடி நழுவி ரெயிலில் இருந்து கீழே தவறி விழ இருந்தார். கண்ணிமைக்கும் நேரத்தில் செந்தில் பாய்ந்து சென்று பெண் பயணியை பாதுகாப்பாக பெட்டிக்குள் தள்ளி பயணியின் உயிரை காப்பாற்றினார். இந்த காவலரின் சரியான நேரத்தில், துணிச்சலான மற்றும் எச்சரிக்கை நடவடிக்கை பெரும் விபத்தை தடுத்துள்ளது. அவரின் இந்த செயல் ஜீவன் ரக்ஷா பிரிவின் கீழ் உரிய பாராட்டுக்கும் அங்கீகாரத்திற்கு உரியது என்பது குறிப்பிடத்தக்கது.இந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவியது இதனை பார்த்த பொதுமக்கள் பல சரியான நேரத்தில் பயணியை காப்பாற்றிய போலீசை பாராட்டினர்கள்.

# திருச்சியில் விடிய, விடிய கொட்டி தீர்த்த மழை தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியதால் பொதுமக்கள் அவதி

திருச்சி, அக்.22-

திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அதிகாலை முதலே மிதமான மழை பெய்து வருகிறது.இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்கியது முதல் திருச்சி மாவட்டத்தில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

கடந்த இரண்டு நாட்களாக திருச்சி மாவட்டத்தில் மழைப்பொழிவு குறைவாக இருந்த நிலையில், நேற்று விடியற்காலை முதல் திருச்சி மாநகரில் ஸ்ரீரங்கம்,டிவிஎஸ் டோல்கேட், கண்டோன்மென்ட், தென்னூர், உறையூர், பாலக்கரை, தில்லைநகர், சத்திரம் பேருந்து நிலையம், கேகே நகர், சின்னக்கடை வீதி, தெப்பக்குளம் மற்றும் மணிகண்டம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நேற்று அரசு பொது விடுமுறை அறிவித்த நிலையில் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. அதனால் மாணவர்களுக்கு மழையால் எந்த வித தொந்தரவும் ஏற்படவில்லை. அதே நேரத்தில் தனியார் நிறுவனங்களில் வேலைக்கு செல்பவர்கள் காலையில் குடை பிடித்தவாரே தங்களின் பணியிடங்களுக்கு சென்றனர். தொடர்ந்து மாவட்டத்தில் பல இடங்களில் மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.இதேபோன்று திருச்சி புறநகர் மாவட்டத்தில் மணப்பாறை, துறையூர் முசிறி மண்ணச்சநல்லூர்,தொட்டியம், திருவெறும்பூர்உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மலை பெய்த வண்ணம் உள்ளது. இதனால் தாழ்வான பகுதிகளில் சாலைகளில் மழை நீர் தேங்கி கிடக்கின்றன.இதைத்தொடர்ந்து வாகன ஓட்டிகள் சாலையில் செல்ல சிரமப்பட்டனர். நேற்று காலை முதல் மேகமூட்டம் காணப்பட்டதால் திருச்சி ஊட்டி, கொடைக்கானல் போன்று குளிர்ந்த காற்று வீசியது.

# மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் விரைவில் 39 பல் மருத்துவ உதவியாளர்கள் நியமனம்

சென்னை, அக்.22-

தமிழ்நாடு மருத்துவ சார்நிலைப் பணியின் கீழ் வரும் பல் மருத்துவ உதவியாளர் பதவியில் 39 காலி பணியிடங்களை நேரடி நியமன முறையில் நிரப்ப ஆன்லைன் வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பிளஸ் 2 (அறிவியல் பாடங்கள்) முடித்துவிட்டு பல் மருத்துவத்தில் டிப்ளமா படிப்பு படித்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். தமிழ்நாடு பல் மருத்துவ கவுன்சிலில் பதிவுசெய்திருக்க வேண்டியது அவசியம். தகுதியுடைய நபர்கள் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தை (www. mrb.tn.gov.in) பயன்படுத்தி நவம்பர் மாதம் 2ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்த காலி பணியிடங்களில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு 20 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு 1ம் வகுப்பு முதல் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியான பல்மருத்துவ டிப்ளமா படிப்பு வரை தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருச்சி தீபாவளி நாளில் அரிசி கடை அதிபர் மகன் வெட்டி படு கொலை: பிரபல ரவுடிகள் கைது

திருச்சி, அக்.22-

திருச்சி மாவட்டம், காந்தி மார்க்கெட் அருகில் வரகனேரி தாயுமானவர் தெருவை சேர்ந்தவர் மணிவண்ணன் .இவருக்கு அழகேஸ்வரன் (வயது 37) மற்றும் உமா சங்கர்(வயது33).

என்ற இரு மகன்கள் உள்ளனர்.

இதில் அழகேஸ்வரன் அரிசி கடை வைத்து நடத்தி வருகிறார்.

உமாசங்கர் சென்னையில் பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் தீபாவளியை முன்னிட்டு நேற்றுமுன்தினம் உமா சங்கர் திருச்சி வந்திருந்தார். நேற்று நள்ளிரவு உமா சங்கர் மற்றும் அழகேஸ்வரன் இருவரும் வரகனேரி பெரியார் நகர் பகுதியில் நடந்து சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது அங்கு மூன்று பேர் சாலையை மறித்தவாறு நின்று பேசிக் கொண்டிருந்தனர். இதனை பார்த்த சகோதரர்கள் இருவரும் இதனை தட்டிக் கேட்டதாக கூறப்படுகிறது.

இதனால் இருதரப்புக்கும் இடையே வாய் சண்டை ஏற்பட்டு ஒரு கட்டத்தில் அடிதடி தகராறு ஏற்பட்டது.

அப்போது அந்த மூன்று பேரும் சேர்ந்து அரிவாளால்அழகேசன், உமா சங்கர் சகோதரர்களை வெட்டியுள்ளனர்.

இதில் படுகாயம் அடைந்த உமாசங்கர் சம்பவ இடத்திலேயேதுடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் இந்த சம்பவத்தில் படுகாயம் அடைந்த அழகேஸ்வரனை அங்கிருந்தவர்கள் மீட்டு உடனடியாகதிருச்சியில் உள்ள தனியார் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இதற்கிடையில் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு காந்தி மார்க்கெட் போலீசார் விரைந்து சென்றனர். இன்ஸ்பெக்டர் சிவராமன் தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை நடத்தினார்கள்.இந்த சம்பவம் குறித்து வழக்கு பதிவு விசாரணை நடத்தினர்.விசாரணையில் கொலைக்கான காரணம் குறித்து தகவல் தெரிய வந்தது. இதையடுத்து இந்த கொலை சம்பவத்தில் ஈடுபட்ட வரகனேரி தெற்கு பிள்ளையார் கோவில் தெருவை சார்ந்த மாஞ்சா வேலு (வயது 27) மதுரை ரோடு ஜீவா நகரை சேர்ந்த ஜெய சூர்யா (வயது 25) மற்றும் வரகனேரி பகுதியை சேர்ந்த மோகன் (வயது 29) ஆகிய மூன்று பேரை போலீசார் கைது செய்தனர். இதில் மாஞ்சா வேலு, ஜெய சூர்யா இருவரும் பிரபல ரவுடிகள் என்பதும், இவர்கள் மீது காந்தி மார்க்கெட், உறையூர் உள்ளிட்ட பல்வேறு காவல் நிலையங்களில் கொலை வழக்குகள் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.மேலும் இந்த கொலை சம்பவத்திற்கு வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். படுகாயம் அடைந்த அழகேசன் திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

தீபாவளி திருநாளில் கொலை சம்பவம் நடந்தது திருச்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


# மெட்ரோ சேவைக்கு பயணிகள் 5க்கு 4.3 மதிப்பெண் வழங்கல்: கம்யூனிட்டி ஆஃப் மெட்ரோஸ் ஆய்வில் தகவல்

சென்னை, அக்.22-

சென்னை மெட்ரோ ரயில் சேவைகளுக்கான ஒட்டு மொத்த பயணிகளின் திருப்தி மதிப்பெண் 5க்கு 4.3 ஆக இருப்பதாக 'கம்யூனிட்டி ஆஃப் மெட்ரோஸ்' ஆய்வில் தெரியவந்துள்ளது. கம்யூனிட்டி ஆஃப் மெட்ரோஸ் (Community of Metros) என்பது உலகம் முழுவதும் உள்ள நகர்ப்புற மெட்ரோ ரயில் சேவைகளின் செயல்பாடுகளை ஒப்பிட்டு, தரநிலைகளை நிர்ணயிக்கும் ஒரு சர்வதேச அமைப்பு ஆகும்.

இந்த அமைப்பில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் 2024ம் ஆண்டில் புதிய உறுப்பினராகச் சேர்ந்தது. உலகத் தரத்திலான செயல்பாடுகளை அடைவதற்கும், முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கும் இது முக்கிய கவனம் செலுத்துகிறது. இதற்கிடையில், கம்யூனிட்டி ஆஃப் மெட்ரோஸ் கடந்த ஆகஸ்டில் இணையதளம் மூலமாக பயணிகள் திருப்தி குறித்த கருத்துப் பதிவை நடத்தியது.

இதில் சுமார் 6,500 வாடிக்கையாளர்களிடம்



இருந்து பதில்களைப் பெற்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முதலிடம் பிடித்துள்ளது. இந்தக் கணக்கெடுப்பு பற்றிய விளம்பரம் சுவரொட்டிகள், இணையதளம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் செய்யப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பானது சேவைத் தரம், அணுகல், கிடைக்கும் தன்மை, நம்பகத்தன்மை, பாதுகாப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இந்த கணக்கெடுப்பில் உலகெங்கிலும் உள்ள 32 மெட்ரோ ரயில் நிறுவனங்கள் பங்கேற்றன. இந்நிலையில், இந்த ஆய்வின் முடிவுகள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னை மெட்ரோ ரயில் சேவைகளுக்கான ஒட்டு மொத்த வாடிக்கையாளர் திருப்தி மதிப்பெண் 5க்கு 4.3 ஆக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு அறிக்கை விவரம்: இந்த ஆய்வுக்குப் பதிலளித்தவர்களில் சுமார் 64 சதவீதம் பேர் ஆண்கள், 33 சதவீதம் பேர் பெண்கள் மற்றும் 3 சதவீதம் பேர் மற்றவர்கள் ஆவர். மேலும் பெரும்பாலான பயணிகள் இளம் வயதினர் (30 வயதுக்கு உட்பட்டவர்கள்). பலர் பணி நிமித்தமாக மெட்ரோ ரயில்களை பயன்படுத்துகின்றனர்.

பயணிகள் கட்டணம் செலுத்தும் முறைகள், கூடுதல் இட வசதி, மெட்ரோ நிலையங்களுக்கு இடையேயான இணைப்பு வசதி மற்றும் நிலையங்களை எளிதாக அணுகும் வசதி ஆகியவற்றில் மேம்பாடுகளை எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு அதில் தெரிய வந்துள்ளது. இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறுகையில், "பயணிகளின் மதிப்புமிக்க கருத்துகளுக்கு நன்றி. பயணிகளின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய, தொடர்ச்சியான மேம்பாடுகளைச் செய்ய உறுதி அளிக்கிறோம்" என்றனர்.



# கூட்டுறவு துறை மூலம் விவசாயிகளுக்கு யூரியா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## த.மா.கா.விவசாய அணி கோரிக்கை மனு

திருச்சி, அக்.22

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ஏராளமான விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு மனுக்களை வழங்கினர்.அதேபோல் த.மா.கா விவசாய அணி மாவட்ட தலைவர் புங்கனூர் செல்வம் தலைமையில் கோரிக்கை மனு அளித்த மனுவில்கூறியப்பதாவது:

திருச்சி மாவட்டத்தில் 14 வட்டாரம் மற்றும் பேரூராட்சி, மாநகராட்சி உள்ளிட்ட பகுதிகளில் காவேரி 17 கிளை வாய்க்கால் மூலம் நெல் சாகுபடி 80,000 ஏக்கருக்கும் பரப்பளவில் விவசாயிகள் விவசாய பணிகள் செய்து வருகின்றனர். மேலும் மற்ற வாழை, கரும்பு, மலர் சாருபடி என 11/4, இலட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப் படுகிறது எனவே கடன் பெரும் விவசாயிகள் அன்றி அனைத்து விவசாயிகளும் தேவையான முழு அளவிலான கடன் வசதி, அரசு கூட்டுறவு துறை மூலம் வழங்க உரம் வழங்க உரிய நடவடிக்கை வேண்டும்.

திருச்சி மாவட்டத்தில் 25,000 டன் தேவை செய்வதால் பற்றாக்குறை மிக அதிக அளவில் உள்ளது. இதைப் பயன்படுத்தி தனியார் உள்ள நிலையில் கூட்டுறவுத் துறையானது குறைவாக கொள்முதல் செய்து வினியோகம் உரம் விற்பனை செய்யும் வியாபாரிகள் 4 மடங்கு விலை உயர்த்தி உள்ளன. எனவே கூட்டுறவுத்துறை மூலம் உறவு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் .விவசாயிகளின் கால்நடைகளுக்கு கால்நடை துறை சார்பில் காப்பீட்டு பிரீமியர் தொகைசெலுத்தவில்லை. கால்நடைகளுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் பல கிராமங்களுக்கு கால்நடை மருத்துவர்கள் அழைத்தாலும் வருவதில்லை. மாட்டுத்தீவனம் பல இடங்களில் மானிய விலையில் கிடைக்கவில்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார். அப்போது வயலூர் ராஜேந்திரன் உடனிருந்தார்.

# பருவமழை காலத்தில் நீர்வழிப் பாதைகளை மேம்படுத்தி சீரமைப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

சென்னை, அக்.22-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தென்சென்னை பகுதியில் நீர்வழிப் பாதைகளை மேம்படுத்தி பருவமழை காலத்தில் வெள்ள நீர் எளிதில் கடலில் சென்று சேரும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சீரமைப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் எதிர்பாராத பெரும் மழையினால் வெள்ளம் ஏற்பட் டாலும், சென்னையில் நீர்தேங்காமல் இருப்பதற்காக நீர்வளத்துறை, சென்னை பெருநகர மாநகராட்சி ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள கால்வாய்களில் ஆழப்படுத்துதல், அகலப்ப டுத்துதல், கான்கிரீட் சுவருடன் கூடிய மூடு கால்வாய் அமைத்தல், மழைநீர் கால்வாய்கள் அமைத்தல், கால்வாய்கள் கடலுடன் சேரும் பகுதிகள், முகத்துவாரப் பகுதிகளில் தொடர்ந்து தூர்வாருதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இதன் காரணமாக கடந்த ஆண்டுகளில் ஒரு சில மணி நேரங்களிலேயே அதிக அளவில் மழை பெய்தபோதும், சில மணி நேரங்களிலேயே வெள்ள நீர் வடிந்து உடனடியாக போக்குவரத்து நடைபெறும் நிலை உருவானது. இதன் தொடர்ச்சியாக, தற்காலத்தில் இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் ஏற்படும் மேகவெடிப்பு உள்ளிட்ட பெருமழையினால் திடீர் வெள்ளம் ஏற்பட்டாலும் அதனை எதிர்கொள்ளும் வகையில் சென்னையின் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ள முன்னேற்பாட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த பணிகளை ஆய்வு செய்து மீதமுள்ள பணிகளை துரிதப்படுத்தும் வகையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (20.10.2025) அன்று, தென்சென்னை பகுதியில் நீர்வழிப் பாதைகளை மேம்படுத்தி பருவமழை காலத்தில் வெள்ள நீர் எளிதில் கடலில் சென்று சேரும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சீரமைப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலாவதாக ஒக்கியம் மடுவு கால்வாயில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக காரப்பாக்கத்தில் சென்னை மெட்ரோ இரயில் மேம்பாலப் பணி நடைபெற்று வரும் பகுதியில் மடுவின் கரைகளை அகலப்படுத்தி சீரமைக்கும் பணியினால் நீர் தடையின்றி செல்வதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து ஒக்கியம் மடுவு கால்வாயில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக பள்ளிக்கரணை சதுப்புநிலப்பகுதிகளில் இருந்து வெளியேறும் நீர் எளிதாக கடலுக்கு செல்லும் வகையில், கண்ணகி நகர் பகுதியில் தூர்வாரும் பணிகளையும், நீர் தடையின்றி செல்வதையும் மடுவின் வலதுபுற கரையில் தனியார் கல்லூரி பகுதியில் இருந்து, பார்வையிட்டார்.

மேலும், ஒக்கிய மடுவு காரப்பாக்கம் பாலத்தின் கீழ்ப்புறம் தூர்வாரும் பணிகளையும், மற்றுமொரு தனியார் கல்லூரிக்கு செல்லும் வழியில் வலது புற கரையை அகலப்படுத்தும் பணிகளையும் பார்வையிட்டார். அப்பகுதியில் மணல் திட்டுக்களை அகற்றும் பணிகளையும், கண்ணகி நகர் பகுதியில் இடது புற கரையையும், தடுப்புச்சுவர் கட்டும் பணிகளையும் பார்வையிட்டு, சீரமைப்பு மற்றும் கட்ட மைப்பு பணிகளை விரைந்து முடிக்குமாறு நீர்வளத்துறை அலுவலர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுரு த்தினார்.

சோழிங்கநல்லூர் பகுதியில் சதுப்பு நிலத்தில் நீர் எளிதாக செல்லவதற்காக, மேடவாக்கம் மற்றும் சோழிங்கநல்லூரை இணைக்கின்ற வகையில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் புதிதாக கட்டப்ப ட்டுள்ள உயர் மட்ட பாலத்தை பார்வையிட்டதுடன், மழைக்காலத்தில் வெள்ள நீர் தடையின்றி எளிதில் செல்லும் வகையில் பழைய பாலத்தை விரைவாக இடித்து அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும், சீரமைக்கவும் நெடுஞ்சாலைத் துறை அலுவல ர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சிறப்புத் திட்ட செயலா க்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நீர்வளத்துறைச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், உள்பட நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# வர்த்தக ஒப்பந்தம் செய்யாவிட்டால் நவ.1லிருந்து 155% வரி: சீனாவுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

பீஜிங், அக்.22-

“சீனா ஒரு நியாயமான வர்த்தக ஒப்பந்தத்துக்கு முன்வராவிட்டால் அந்நாட்டுப் பொருட்கள் மீது 155% வரி விதிக்க வேண்டிய சூழல் ஏற்படும்.” என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.



முன்னதாக, வெள்ளை மாளிகையில் ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பானீஸுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை ட்ரம்ப் நடத்தினார். அதன்பின்னர் பேசிய ட்ரம்ப், “சீனாவை அமெரிக்கா மிகுந்த மரியாதையுடன் நடத்தியது. ஆனால், நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை சீனா தொடர்ந்தால் அதனை அமெரிக்கா பொறுத்துக் கொள்ளாது. சீனாவும் எங்களை மதிக்கிறது என்று நான் நம்புகிறேன்.

அவர்கள் தற்போது 55% வரி செலுத்துகிறார்கள். இதுவே அதிகம் தான். இந்நிலையில், சீன அதிபர் ஜி ஜின்பிங் அமெரிக்காவுடன் ஒரு நியாயமான வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால் நவம்பர் 1ம் தேதி முதல் சீனா 155% வரை வரிகளை எதிர்கொள்ள நேரிடும்.

வர்த்தகப் பேச்சு வார்த்தை மேசையில் தீர்க்கப்பட வேண்டிய தனது முக்கியக் கோரிக்கைகளான அரிதான கனிமங்கள், ஃபெண்டானில் மற்றும் சோயாபீன்ஸ் ஆகியவற்றை அவர் பட்டியலிட்டார். புதிய ஏற்றுமதி தடைகளையும் விதிப்போம்.

ஆண்டாண்டுகாலமாக அமெரிக்காவை வர்த்தக ரீதியாக உலக நாடுகள் தமக்கு சாதகமாகப் பயன் படுத்திய சகாப்தமெல்லாம் முடிந்துவிட்டது. இனியும் அவர்கள் அமெரிக்காவை அப்படிப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. அமெரிக்கா அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பதில் வரி விதிப்புக்குப் பின்னர் எங்களை பயன்படுத்திக் கொள்ளும் போக்கு மாறி விட்டது.

வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திக்க நான் தயாராக இருக்கிறேன். எங்களுக்குள் மிகச் சிறந்த உறவு உள்ளது. விரைவில் நாங்கள் சந்திப்போம். அமெரிக்கா சீனா இடையேயான வலுவான வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் என்று நம்புகிறோம். இருவருமே மகிழ்ச்சியான ஒரு முடிவை எட்டுவோம்.” என்றார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் இந்தப் பேட்டி வெளியான சில மணி நேரங்களிலேயே உலக வர்த்தக அமைப்புக்கான (டபிள்யுடிஓ WTO) சீனாவின் நிரந்தரப் பிரதிநிதியாக இருந்த லீ செங்காங் மாற்றப்பட்டார். அவருக்குப் பதிலாக அப்பதவியில் லீ யோங்ஜி நியமிக்கப்பட்டுள்ளார்.

# “தேனி வெள்ளம்... திமுக அரசால் உருவாக்கப்பட்ட மனித பேரிடர்” - நயினார் நாகேந்திரன் சாடல்

சென்னை, அக்.22-

தேனியில் ஏற்பட்ட வெள்ளம் திமுக அரசால் உருவாக்கப்பட்ட மனிதப் பேரிடர் என பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தள பதிவில் நயினார் நாகேந்திரன் கூறியிருப்பதாவது: எழில் கொஞ்சும் தேனி மாவட்டம், தற்போது கடும் வெள்ளத்தில் சிக்கி அவதியுறுவதைக் கண்டு நெஞ்சம் பதைபதைக்கிறது. வரலாறு காணாத தொடர்மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும் இது ஒருவிதத்தில் திமுக அரசால் உருவாக்கப்பட்ட மனிதப் பேரிடரே.

பருவமழை தொடங்கும் முன்பே, கால்வாய்களைத் தூர்வாரி, நீர்நிலைகளை பேணி இருந்தால் இது போன்றதொரு பேரிடர் ஏற்பட்டிருக்குமா? பருவமழையை முன் கூட்டியே கணித்து உரிய முன்னேற்பாடுகளைச் செய்து, மக்களை எச்சரித்து இருந்தால், இதுபோன்ற சேதம்தான் ஏற்பட்டிருக்குமா? முல்லை பெரியாறு அணையில் 4 நாட்களுக்கு முன்பு வரை 1,000 கன அடி நீர் மட்டுமே திறந்துவிடப்பட்ட நிலையில், 18ம் தேதி இரவு மட்டும் தமிழக நீர்வளத் துறையால் 7,163 கன அடி நீர் திறந்து விடப்பட்டிருப்பதுதான் வெள்ளத்துக்கான காரணமோ என்ற சந்தேகமும் எழுகிறது.

மொத்தத்தில் திமுக அரசின் அலட்சியத்தால் நள்ளிரவில் தங்கள் வீடுகளை இழந்தும், கால்நடைகளைப் பறிகொடுத்தும், வயல்வெளிகள் சேதமாகியும் வாழ்வாதாரமின்றி மக்கள் தவிக்கும்போது, மீட்புப்பணியைத் துரிதப்படுத்தாமல் மெத்தனமாக இருக்கிறது விளம்பர மாடல் அரசு.

முதல்வர் மு.க.ஸ்டாலின் உடனடியாகத் தேனி விரைந்துச் சென்று போர்க்கால அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பாக மக்களை வைத்திட முகாம்கள் அமைக்க வேண்டும். மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உரிய இழப்பீடு வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வட கிழக்கு பருவமழை கேரளாவில் தீவிரமடைய வாய்ப்பு: 10 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை

புதுடெல்லி, அக்.22-

வட கிழக்குப் பருவமழை அடுத்த 24 மணி நேரத்தில் கேரளாவில் தீவிரமடைய வாய்ப்புள்ளதாக கணித்துள்ள இந்திய வானிலை ஆய்வு மையம் பாலக்காடு, கோழிக்கோடு உள்பட 10 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ளது.



இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தென்கிழக்கு அரபிக்கடலில் நிலை கொண்டுள்ள தீவிரமான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, தீவிர காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறும் அபாயம் உள்ளது. இதன் காரணமாகவே, கேரளாவில் பரவலாக மழை பெய்யத் தொடங்கி உள்ளது. அடுத்த 48 மணி நேரத்தில் வடகிழக்குப் பருவமழை கேரளாவில் தீவிரமடையும் வாய்ப்புள்ளது.

பத்தினம்திட்டா, ஆலப்புழா, கோட்டயம், எர்ணாகுளம், இடுக்கி, திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு ஆகிய மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது” என தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவிலும் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. “தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதை ஒட்டிய தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் சராசரி கடல் மட்டத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் வரை மேல் காற்று சுழற்சி நீடிக்கிறது. இதனால், அடுத்த 24 மணி நேரத்தில் வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றழுத்தப் பகுதி உருவாகும்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 947 கோடி உதவித் தொகையை குஜராத் அரசு அறிவித்துள்ளது. மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.563 கோடி, மாநில அரசின் பட்ஜெட் நிதியில் இருந்து ரூ. 384 கோடி என மொத்தம் ரூ. 947 கோடி நிவாரணமாக வழங்கப்படும் என குஜராத் அரசு அறிவித்துள்ளது. ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் பெய்த கனமழையால் பயிர் சேதம் அடைந்த 5 மாவட்ட விவசாயிகளுக்கு இந்த நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

# தீபாவளி பண்டிகைக்காக அறிவிக்கப்பட்ட 6 சிறப்பு ரயில்கள் ரத்து: தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை, அக்.22-

தீபாவளி பண்டிகைக்காக மதுரை வழியாக சென்னை சென்ட்ரல் மற்றும் செங்கோட்டை இடையே முதலில் சிறப்பு ரயில் அறிவிக்கப்பட்டது. பின்னர் இந்த ரயில் சேவையானது, கோட்டயம் வரை நீட்டிக்கப்பட்டது. இந்த வழித்தடத்தில் அக்.1, 8, 15 மற்றும் 22 ஆகிய தேதிகளில் ரயில்கள் இயங்கும் என்று தெற்கு ரயில்வே அறிவித்தது. இந்த ரயில்கள் புனலூர், கொட்டாரக்கரா, கொல்லம் மற்றும் செங்கனூரில் நின்று செல்லும் என்றும் தெற்கு ரயில்வே கூறியிருந்தது. தெற்கு ரயில்வே எதிர்பார்த்தபடி, அக்டோபர் 1ம் தேதி முதல் பயணிகள் முழுமையாக முன்பதிவு செய்திருந்தனர். தீபாவளி நேரத்தில் கூட்ட நெரிசல் இருந்த போதிலும், அடுத்தடுத்த பயணங்களின் போது இந்த கூட்டம் குறைவாக காணப்பட்டது.

மூன்றடுக்கு குளிர் சாதன வசதி கொண்ட பெட்டிகளும் இந்த ரயில் சேவையில் இணைக்கப்பட்டு இருந்தது. ஆனால், எதிர்பார்த்த படி பயணிகள் முன்பதிவு செய்ய ஆர்வம் காட்டவில்லை. இதையடுத்து, சென்னை சென்ட்ரல் கோட்டயம் இடையே அக்.22ம் தேதி இயக்கப்படும் சிறப்பு ரயில்(06121) ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதேபோன்று, அக்.23ம் தேதி மறு மார்க்கமாக கோட்டயம் சென்னை சென்ட்ரல் ரயில் சேவையும் (06122) ரத்து செய்யப்படுவதாக ரயில்வே அதிகாரிகள் கூறி உள்ளனர். அதே போல், நெல்லை செங்கல்பட்டு, செங்கல்பட்டு நெல்லை, நாகர்கோவில் சென்ட்ரல், சென்ட்ரல் நாகர்கோவில் ஆகிய 6 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

# நடப்பாண்டில் 7வது முறையாக நிரம்பிய மேட்டூர் அணை: காவிரி ஆற்றில் விநாடிக்கு 30,000 கன அடி நீர் திறப்பு

மேட்டூர், அக்.22-

காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதையடுத்து, மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 30,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் 7 வது முறையாக முழு கொள்ளளவை எட்டியுள்ளது.



தமிழகம், கேரளா, கர்நாடக உள்ளிட்ட மாநிலங்களில் நடப்பாண்டில் தென்மேற்கு பருவமழை ஜூன் மாதத்துக்கு முன்கூட்டியே தொடங்கிய நிலையில், கர்நாடகாவில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. அங்குள்ள அணைகள் நிரம்பிய நிலையில், உபரிநீர் காவிரியில் திறந்து விடப்பட்டது. இதன் காரணமாக, நடப்பாண்டில் முதன் முறையாக, மேட்டூர் அணை கடந்த ஜூன் 29ல் நிரம்பியது. டெல்டா பாசனத்துக்கு ஜூன் 12ம் தேதி முதல் நீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர்திறப்பு காரணமாக, அணையின் நீர்மட்டம் குறைவதும், காவிரியில் நீர்வரத்து அதிகரிக்கும் போது, அணை மீண்டும் நிரம்புவதுமாக இருந்து வருகிறது.

நடப்பாண்டில் 2வது முறையாக கடந்த ஜூலை 5 தேதியும், ஜூலை 20ம் தேதி 3வது முறையும், ஜூலை 25ம் 4 முறையும், ஆகஸ்ட் 20ம் தேதி 5வது முறையாகவும், செப்டம்பர் 2ம் தேதி 6வது முறையாகவும் மேட்டூர் அணை முழுக்கொள்ளளவை எட்டியது.

இந்நிலையில், தற்போது வடகிழக்கு பருவமழையும் தீவிரமடைகிறது. இதனால், அணைக்கு நேற்று மாலை விநாடிக்கு 20,000 கன அடியாகவும், இரவு 8 மணிக்கு 22,500 கன அடியாகவும், இரவு 11 மணிக்கு 30,000 கன அடியாக அதிகரித்து இருந்தது. அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து இருந்ததால், நேற்று மாலை 3 மணிக்கு மேட்டூர் அணை முழு கொள்ளளவான 120 அடியை 7வது முறையாக எட்டியது.

இதையடுத்து, அணையின் பாதுகாப்பு கருதி, நேற்று இரவு 11 மணிக்கு, அபாய ஒலி எழுப்பி 16 கண் மதகு வழியாக உபரிநீர் வெளியேற்றப்பட்டது. காவிரி ஆற்றில் விநாடிக்கு 30,500 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர்மின் நிலையங்கள் வழியாக விநாடிக்கு 22,300 கனஅடியும், 16 கண் மதகு வழியாக 7,700 கனஅடியும் என மொத்தமாக காவிரியில் 30,000 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

கால்வாய் பாசனத்துக்கு 500 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. மேட்டூர் அணைக்கு இன்று காலை நீர்வரத்து 30,000 கன அடியாவும், நீர்மட்டம் 120 அடியாகவும், நீர் இருப்பு 93.47 டிஎம்சியாகவும் உள்ளது.

ஒரே ஆண்டில், மேட்டூர் அணை முழு கொள்ளளவை 7 முறை எட்டுவது இதுவே முதல் முறையாகும். அணையிலிருந்து உபரிநீர் திறக்கப்பட்டு வருவதால், கரையோர பகுதியில் வருவாய்துறை மற்றும் தீயணைப்பு துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000